**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பு – 2022-2023 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியினர்களுக்கு அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு / பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற திட்டங்களுக்கு ரூ.1718.03 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை**

**அரசாணை (ப) எண். 112** **நாள் 27.05.2022**

வைகாசி மாதம் 13-ஆம் நாள்,
பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.பமே/அ3/5009/2021, நாள் 11.03.2022 மற்றும் 25.03.2022

*******

**ஆணை :-**

2022-2023-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய 11 மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு / பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்"

2. மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி, அத்திபாடி கிராமம் பகுதியில் உல்ஜக்கடி முதல் கீழ்வலசு வரை உள்ள சாலைக்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.360.26 இலட்சமும், திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், நாயக்கனேரி மலை பழங்குடியினர் பகுதியில் தடுப்பணை கட்டுதல் பணிக்கு ரூ.4.95 இலட்சமும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரண்டு சாலை வசதி பணிக்கு ரூ.557.25 இலட்சமும், திருச்சி மாவட்டம் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.48.40 இலட்சமும், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பள்ளங்கி கோம்பை,

பாரதி அண்ணா நகர் பழங்குடியினர் காலனி அடுக்கம் காலனி மேடு மற்றும் பொழம்பதி பழங்குடியினர் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.58.00 இலட்சமும், ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், கும்தபுரம் கானகரை, கேர்மாளம், மந்தைக்காடு, பெடர்பாளையம் நீர்க்குண்டி, வைத்யநாதபுரம், மந்தைக்காடு, செல்லுமித்தொட்டி, பசகுட்டை ஆகிய பழங்குடியினர் காலனிகளுக்கு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.165.42 இலட்சம் மற்றும் பர்கூர் ஊராட்சிக்கு சாலை வசதிக்கு ரூ.255.45 இலட்சமும் மற்றும் நாமக்கல், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, திருப்பத்தூர் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகள் மற்றும் விடுதிக்கு கட்டிட பராமரிப்பு / பழுது பார்ப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.268.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1718.03 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் தடுப்புசுவர் ஏற்படுத்தும் பணிக்கு ரூ.360.26 இலட்சமும், திருப்பத்தூர் மாவட்டத்தில் தடுப்பணை கட்டும் பணிக்கு ரூ.4.95 இலட்சமும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சாலை வசதிகள் ஏற்படுத்துவதற்கு ரூ.557.25 இலட்சமும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளுக்கு அடிப்படைவசதி ஏற்படுத்துவதற்கு ரூ.48.40 இலட்சமும், திண்டுக்கல் மாவட்டத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.58.00 இலட்சமும், ஈரோடு மாவட்டத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை ஏற்படுத்துவதற்கு ரூ.420.87 இலட்சமும் மற்றும் நாமக்கல், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்களுக்கான கட்டிட பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் நல மாணவியர் விடுதிக்கு பக்கச்சாலை நடைபாதை அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.268.30 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.17,18,03,000/-க்கு(ரூபாய் பதினேழு கோடியே பதினெட்டு இலட்சத்து மூன்றாயிரம் மட்டும்) இணைப்புகளில் உள்ளவாறு 2022-2023-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> 4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 02 பழங்குடியினர் நலன் -796 பழங்குடியினர் பகுதித் துணைத்திட்டம் – மாநிலச் செலவினங்கள் JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்.
> IFHRMS (த.தொ.கு. எண் 4225 02 796 JA 41601)

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாகவும், மற்ற ஏனைய பணிகளை சம்மந்தப்பட்ட திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாகவும் மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு வழுங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பணிகளை மேற்கொள்ள உரிய செயல்முறை ஆணையினை வெளியிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.23779/நிதி [ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்]/2022, நாள் 27.05.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர்கள், திருவண்ணாமலை, திருப்பத்தூர்,
திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர்,
நீலகிரி, சேலம், கள்ளகுறிச்சி, தருமபுரி
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை,
கள்ளக்குறிச்சி, ஈரோடு.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி.
திட்ட அலுவலர்கள், பழங்குடியினர் நலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர்,
திருச்சி, நாமக்கல், சேலம், கள்ளகுறிச்சி, தருமபுரி.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/அநமு1) துறை,
சென்னை-600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/5/2022

பிரிவு அலுவலர்

27/05/2022

**அரசாணை (ப) எண். 112, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2))துறை, நாள் 27.05.2022**

**இணைப்பு-1**

**பழங்குடியினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் மற்றும் மதிப்பீடு.**

| வ.எண். | திட்ட விவரம் | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருப்பத்தூர் தடுப்பணை கட்டும் வசதி | 4.95 |
| 2. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படைவசதி | 48.40 |
| 3. | திண்டுக்கல் மாவட்டம் சிமெண்ட் கான்கிரீட் சாலை | 58.00 |
| 4. | ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம் சிமெண்ட் கான்கீரிட் சாலை | 165.42 |
| 5. | நாமக்கல், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்களுக்கான கட்டட பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்பு பணிகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் நல மாணவியர் விடுதிக்கு பக்கச் சாலை நடைபாதை அமைத்தல் | 268.30 |
| | **மொத்தம்** | **545.07** |

**ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் மற்றும் மதிப்பீடு.**

| வ.எண். | திட்ட விவரம் | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம் சாலைகளில் தடுப்புசுவர் ஏற்படுத்தும் பணி | 360.26 |
| 2. | கள்ளக்குறிச்சி மாவட்டம் சாலை வசதிகள் (ரூ.273.15 + 284.10) | 557.25 |
| 3. | ஈரோடு மாவட்டம், பர்கூர் ஊராட்சி சிமெண்ட் கான்கீரிட் சாலை | 255.45 |
| | **மொத்தம்** | **1172.96** |

ஆக மொத்தம் ரூ.17,18,03,000/- (ரூபாய் பதினெழு கோடியே பதினெட்டு இலட்சத்து மூன்றாயிரம் மட்டும்)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/05/2022
பிரிவு அலுவலர்
27/05/2022

**அரசாணை (ப) எண். 112, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2))துறை, நாள் 27.05.2022**

**இணைப்பு-2**

**பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, தடுப்பணை கட்டுதல் மற்றும் பள்ளிகள் பராமரிப்பு / பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற திட்டங்களின் விவரம்.**

**1. திருவண்ணாமலை மாவட்டம்:-**

| வ. எண் | மாவட்டம் | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருவண்ணாமலை மாவட்டம் | தண்டராம்பட்டு ஊராட்சி, அத்திபாடி கிராமம் உல்ஜக்கடி முதல் கீழ்வலசை (1/800 கி.மீ. முதல் 4/800 கி.மீ. வரை) சாலையில் தடுப்புச்சுவர்(Retaining Wall) கட்டும் பணி | 360.26 |
| | | **மொத்தம்** | **360.26** |

**2. திருப்பத்தூர் மாவட்டம் :-**

| வ. எண் | மாவட்டம் | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், நாயக்கனேரிமலை பழங்குடியினர் பகுதியில் தடுப்பணை கட்டுதல் (Minor Irrigation) Checkdam | 4.95 |
| | | **மொத்தம்** | **4.95** |

**3. கள்ளக்குறிச்சி :-**

| வ எண் | மாவட்டம் | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | சாலை மேம்பாடு செய்யும் வசதி (நொச்சிமேடு முதல் பணப்பாடி வரை)(1/280 கி.மீ. முதல் 3/300 கி.மீ. வரை) | 273.15 |
| | | சாலை மேம்பாடு செய்யும் வசதி (அத்திப்பாடி முதல் வெள்ளிரிகாடு வரை)(0/0 கி.மீ. முதல் 1/600 கி.மீ. வரை | 284.10 |
| | | **மொத்தம்** | **557.25** |

**4. திருச்சிராப்பள்ளி:-**

| வ. எண் | மாவட்டம் | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி, செம்புளிச்சாம்பட்டி பள்ளி வளாகத்திலுள்ள மாரியம்மன் கோவில் முன் பகுதியில் சிமெண்ட் கல் பாவுதல் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட துவக்கப்பள்ளி, சின்னஇலுப்பூர் பள்ளி வகுப்பறை பகுதியின் முன்புறம் சிமெண்ட் கல் பாவுதல் பணி | 11.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட துவக்கப்பள்ளி, பரத்தாள் பள்ளி வகுப்பறை மேற்கூரை பழுது பார்த்தல் உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் பூசுதல் பள்ளியின் வகுப்பறையின் முன்புறம் சிமெண்ட் கற்கள் பாவுதல் பணி | 10.15 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட துவக்கப்பள்ளி, பாளையம் பள்ளி வகுப்பறை மேற்கூரை பழுதுபார்த்தல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் பூசுதல் பள்ளி வகுப்பறை கட்டிடம் முன்புறம் சிமெண்ட் கற்கள் பாவுதல் பணி | 10.50 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி, செம்புளிச்சாம்பட்டி ஆய்வகக்கூட கட்டிடம் ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல் உள்புறம் மற்றும் வெளிபுறம் பெயிண்டிங் செய்யும் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, சின்ன இலுப்பூர் பள்ளியின் முன்புற நுழைவுப் பகுதியிலிருந்து ஆய்வகக்கட்டிடம் வரை அணுகுசாலை (சிமெண்ட் சாலை) அமைத்தல் பணி | 6.75 |
| | | **மொத்தம்** | **48.40** |

**5. திண்டுக்கல்:-**

| வ. எண் | மாவட்டம் / பஞ்சாயத்து | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் வில்பட்டி | திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் வட்டம், பள்ளங்கி – கோம்பை ஜெ. ஜெ.நகர் காளியப்பன் வீடு முதல் சுருளி வீடு வரை பழங்குடியினர் காலனிக்கு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணி (120 மீ.) | 8.50 |
| | | திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பாரதி அண்ணா நகர் பழங்குடியினர் காலனி அஞ்சு வீடு, பழனிச்சாமி வீடு முதல் பழனி வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி (120 மீ.) | 8.50 |
| | | திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம் பாரதி அண்ணா நகர் பழங்குடியினர் காலனி நடராஜ் வீடு முதல் செங்கோடன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி (120 மீ.) | 8.50 |
| | அடுக்கம் | திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், அடுக்கம் காலனி மேடு (எஸ்.டி) செல்வம் வீடு முதல் ஜெயபால் வீடுவரை சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல் பணி (120மீ.) | 8.50 |
| | பூண்டி | திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், போலூர் மெயின் ரோடு முதல் பொழம்பதி பழங்குடியினர் காலனி காமராஜர் காலனி வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி (300மீ.) | 24.00 |
| | | **மொத்தம்** | **58.00** |

**6. ஈரோடு:-**

| வ. எண் | மாவட்டம் / ஊராட்சி | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | ஈரோடு மாவட்டம், தாளவாடி | 1. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், கும்தபுரம் குடியிருப்பு, கும்தபுரம், பழங்குடியினர் காலனியில் சிமெண்ட் கான்கீரீட் சாலை மற்றும் வடிகால் அமைத்தல் பணி. | 8.61 |
| | | 2. ஈரோடு மாவட்டம், தளவாடி வட்டம், கேர்மாளம், கானகரை பழங்குடியினர் காலனியில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் பணி | 4.70 |

| | | | |
|---|---|---|---|
| | | 3. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், கேர்மாளம், ஒருத்தி மெயின் தெருவில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் பணி. | 8.50 |
| | | 4. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர் குடியிருப்பு, மந்தைக்காடு, பழங்குடியினர் காலனியில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் பணி (cross street) | 27.91 |
| | | 5. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர், குடியிருப்பு பெடர்பாளையம், மெயின் ரோடு முதல் கம்யூனிட்டி ஹால் வரை சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் பணி. | 2.80 |
| | | 6. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர் குடியிருப்பு, நீர்க்குண்டி, பழங்குடியினர் காலனியில் சிமெண்ட் கான்கீரீட் சாலை மற்றும் வடிகால் அமைத்தல் பணி. | 4.51 |
| | | 7. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர் குடியிருப்பு, வைத்யநாதபுரம், பழங்குடியினர் காலனியில் சிமெண்ட் கான்கீரீட் சாலை மற்றம் வடிகால் அமைத்தல் பணி | 19.37 |
| | | 8. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர் குடியிருப்பு, மந்தைக்காடு, பழங்குடியினர் காலனியின் மெயின் தெருவில் சிமெண்ட் கான்கீரீட் சாலை மற்றும் வடிகால் அமைத்தல் பணி.(Main street) | 53.39 |
| | | 9. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர் குடியிருப்பு, செல்லுமித்தொட்டி, பழங்குடியினர் காலனியின் சிமெண்ட் கான்கீரீட் சாலை மற்றும் வடிகால் அமைத்தல் பணி. | 20.36 |
| | | 10. ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், திங்களூர் குடியிருப்பு, பசுகுட்டை, பழங்குடியினர் காலனி தெருவில் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல் பணி. | 15.27 |
| | | மொத்தம் | 165.42 |

**ஈரோடு மாவட்டம், பர்கூர் ஊராட்சி:-**

| வ. எண் | மாவட்டம்/ ஊராட்சி | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | ஈரோடு பர்கூர் | பர்கூர் ஊராட்சி ஊசிமலை குக்கிராமத்தில் ஊசிமலை முதல் பாவளா சாலை வரை சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 12.05 |
| 2 | | பர்கூர் ஊராட்சி கொங்காடை செல்லும் சாலையில் கொங்காடை பாட்டபாளையம் முதல் சுண்டப்பேடு வரை உள்ள சாலையினை பலப்படுத்துதல் | 55.38 |
| 3 | | பர்கூர் ஊராட்சி ஒந்தனை பள்ளி முதல் கடுவளா வரை சாலை மேம்பாடு செய்தல் | 43.60 |
| 4 | | பர்கூர் ஊராட்சி தாளகரை பழங்குடியினர் காலனியில் சிறு பாலம் அமைத்தல் | 35.85 |
| 5 | | பர்கூர் ஊராட்சி அக்னிபாவி பழங்குடியினர் காலனியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.60 |
| 6 | | பர்கூர் ஊராட்சி தேவர்மலை முதல் சோளகர் காலனி வரை உள்ள சாலையினை பலப்படுத்துதல் | 103.97 |
| | | மொத்தம் | 255.45 |

**நாமக்கல், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, திருப்பத்தூர் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளி மற்றும் விடுதிகளுக்கான கட்டிட பராமரிப்பு / பழுது பார்ப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள்:-**

| வ எண் | மாவட்டம் | பணிகள் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | நாமக்கல் | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, (ஆண்கள்) ஆறு வகுப்பறை கட்டடம் , முள்ளுக்குறிச்சி வகுப்பறைக்கு தரை ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் வெளிபுறம் வர்ணம் அடிக்கும் பணி மற்றும் கழிப்பிட அறை பழுதுபார்க்கும் பணி | 12.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, மூன்று வகுப்பறை (ம) இரண்டு வகுப்பறை செங்கரை, கொல்லிமலை. சுற்றுச்சுவர் பணி | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட துவக்கப் பள்ளி, மேலூர், ராசிபுரம். வகுப்பறைக்கு தரை ஒடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்தும் பணி, உள்புறம் வெளிபுறம் வர்ணம் அடிக்கும் பணி | 9.90 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, முள்ளுக்குறிச்சி. பள்ளி வளாகத்தில் தலைமையாசிரியர் மற்றும் அலுவலக அறையின் முன்புறப்பகுதியில் சிமெண்ட் கற்கள் பாவுதல் பணி | 14.50 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட பெண்கள் மேல்நிலைப்பள்ளி, முள்ளுக்குறிச்சி. வகுப்பறைகளில் தரை ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் வெளிபுறம் வர்ணம் அடிக்கும் பணி | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, செங்கரை, கொல்லிமலை சுற்றுச்சுவர் பணி | 10.00 |
| | | **மொத்தம்** | **66.40** |
| 2 | திருவண்ணாமலை | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி, மண்டப்பாறை மேற்கூரை வெதரிங் ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், புதிய ஜன்னல் பொருத்துதல் உள்புறம் வெளிபுறம் வர்ணம் அடிக்கும் பணி மழைநீர் பைப் பொருத்துதல், toilet basin பொருத்துதல் | 10.00 |
| 3 | கோயம்புத்தூர் | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, அனைக்கட்டி, பள்ளி கட்டிடத்தின் மேற்கூரையில் தட்டு ஓடுகள் பதித்தல், மழைநீர் வழிந்தோட செய்தல், வர்ணம் பூசுதல், புதிய பிவிசி குழாய்கள் பொருத்துதல், மின் இணைப்புகள், மேற்கூரை இரும்பு தகட்டால் பொருத்துதல், | 10.00 |
| 4 | நீலகிரி | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி, தேவாலா பள்ளி கட்டிடத்தின் மேற்கூரையில் தட்டு ஓடுகள் பதித்தல், மழைநீர் வழிந்தோட செய்தல், வர்ணம் பூசுதல், புதிய பிவிசி குழாய்கள் பொருத்துதல், மின் இணைப்புகள், மேற்கூரை இரும்பு தகட்டால் பொருத்துதல், | 10.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | சேலம் | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, அருநூத்துமலை 4 வகுப்பறை தரை ஒடுகள் பதித்தல், மின் சாதனங்கள் பொருத்தும் பணி மற்றும் வர்ணம் அடிக்கும் பணி. | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி, செம்மநத்தம் வகுப்பறை ரூபிங் நீர் கசிவு சரி செய்தல், தரை ஒடுகள் பதித்தல், மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் வெளிபுறம் வர்ணம் பூசுதல். | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதிக்கு, ஏற்காடு மெயின் சாலை முதல் விடுதி வரை கான்கிரீட் பக்கச்சாலை சிமெண்ட் கல்லில் நடைபாதை அமைத்தல் (65மீ) | 10.00 |
| | | **மொத்தம்** | **30.00** |
| 6 | கள்ளக்குறிச்சி | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி கிளாக்காடு கல்ராயன் மலை(மூன்று வகுப்பறை கட்டடம்) ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி கல்ராயன் மலை, மேல்பரிகம் (இரண்டு வகுப்பறை கட்டடம்) ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல் மற்றும் வகுப்பறை வராண்டா தரை ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் | 9.50 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி (மூன்று வகுப்பறை கட்டடம்) பொட்டயம் கல்ராயன் மலை ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, புதிய தட்டோடுகள் பதித்தல், வகுப்பறை மற்றும் வராண்டா தரை ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் | 8.50 |

| | | | |
|---|---|---|---|
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி (மூன்று வகுப்பறை கட்டடம்) மேல்வாழப்பாடி கல்ராயன் மலை<br>ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, புதிய தட்டோடுகள் பதித்தல், வகுப்பறை மற்றும் வராண்டா தரை ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி (மூன்று வகுப்பறை கட்டடம்) சேராப்பட்டு கல்ராயன் மலை<br>ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, புதிய தட்டோடுகள் பதித்தல், வகுப்பறை மற்றும் வராண்டா தரை ஓடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் | 8.50 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி) வண்டகாபாடி கல்ராயன் மலை (இரண்டு வகுப்பறை கட்டடம்)<br>ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி தேக்கம்பட்டு கல்ராயன் மலை (இரண்டு வகுப்பறை கட்டடம்)<br>ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி மட்டப்பாடு கல்ராயன் மலை (இரண்டு வகுப்பறை கட்டடம்)<br>ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல் உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, கோமுகி அணை (ஆய்வுக் கூட கட்டடம்) ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல், தரை ஓடுகள் பதித்தல், உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல் பணி | 15.40 |

| | | | |
|---|---|---|---|
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி, கொட்டாப்புதூர் கல்ராயன் மலை (மூன்று வகுப்பறை கட்டடம்) ஆர்சிசி கூரையில் பழுதுபார்ப்பு, தட்டோடுகள் பதித்தல், புதிய இரும்பு கதவு மற்றும் ஜன்னல்கள் பொருத்துதல், சிமெண்ட் பூச்சு வேலை, கட்டிடம் உள்புறம் மற்றும் வெளிபுறம் வர்ணம் அடித்தல், ரீவயரிங் மற்றும் மின்சாதனங்கள் பொருத்துதல் | 10.00 |
| | | **மொத்தம்** | **86.90** |
| 7 | தருமபுரி | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட உயர்நிலைப்பள்ளி, எஸ்.தாதம்பட்டி அரூர் வட்டம் (இரண்டு வகுப்பறை கட்டடம்)<br>ஆர்சிசி கூரையில் பழுது பார்த்தல், தட்டோடு பதித்தல், வர்ணம் பூசுதல், வெளிபுறம் கான்கீரீட் வழித்தடம் அமைத்தல், வகுப்பறை உள்ளே தரையில் டைல்ஸ் பதித்தல், மழைநீர் சேகரிப்பு அமைத்தல், மின் இணைப்பு பழுது பார்த்தல். | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி (மூன்று வகுப்பறை கட்டடம்) கலசபாடி<br>ஆர்சிசி கூரையில் பழுது பார்த்தல், தட்டோடு பதித்தல், வர்ணம் பூசுதல், வெளிபுறம் கான்கிரீட் வழித்தடம் அமைத்தல், வகுப்பறை உள்ளே தரையில் டைல்ஸ் பதித்தல், மழைநீர் சேகரிப்பு அமைத்தல், மின் இணைப்பு பழுது பார்த்தல். கதவு, ஜன்னல் பழுது பார்த்தல் | 10.00 |
| | | **மொத்தம்** | **20.00** |
| 8 | திருப்பத்தூர் | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி, பள்ளக்கொல்லை (சுற்றுச்சுவர் உயர்த்திக் கட்டுதல்)<br>பள்ளியின் சுற்றுசுவர் 118.00 மீ நீளம் 1.00 மீ உயரம் உயர்த்தும் பணி மற்றும் வர்ணம் பூசுதல் | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி சேம்பரை<br>வெதரிங் டைல்ஸ் அமைக்கும் பணி, கதவு ஜன்னல் பழுது பார்க்கும் பணி, விடுதியின் உட்புறம், சுற்றுசுவர், கதவு ஜன்னல் வர்ணம் பெயிண்டிங் பணி. மின்சார ஒயரிங் பணி. | 5.00 |

| | | | |
|---|---|---|---|
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப் பள்ளி) நடுக்குப்பம் (சுற்றுச்சுவர் உயர்த்துதல்) 35 மீ நீளம் உயர்த்துதல் பணி, பள்ளி உட்புறம் வெளிபுறம் சுற்றுசுவர் வண்ணம் பூசுதல் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப் பள்ளி, (மேம்பாடு பணி) ரங்கசமுத்திரம் வெதரிங் கான்கிரீட் டைல்ஸ் அமைக்கும் பணி, சுற்றுச்சுவர் 25.00 மீ நீளம் 1.00 மீ உயரம் உயர்த்தும் பணி, கட்டிடத்தின் உட்புறம் வெளிபுறம் சுற்றுசுவர், கதவு ஜன்னல் வர்ணம் பூசுதல் பணி, மின்சார ஒயரிங் செய்யும் பணி, செப்டிக் டேங்க் ரிப்பேர் பணி, பள்ளி சுற்றிலும் கான்கீரீட் பேவ்மெண்ட் அமைக்கும் பணி. | 10.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப் பள்ளி (சுற்றுச்சுவர் உயர்த்துதல்) அத்தனாவூர் 118 மீ நீளம் 1.00 மீட்டர் உயரம் உயர்த்துதல் பணி, வர்ணம் பூசுதல் பணி | 5.00 |
| | | அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்கப் பள்ளி, (சுற்றுச்சுவர் உயர்த்துதல்) அரசமரத்துக்கொல்லை சுற்றுசுவர் 165 மீ நீளம் 1.00 மீ உயர்த்தும் பணி, வர்ணம் பூசுதல் பணி. | 5.00 |
| | | **மொத்தம்** | **35.00** |
| | | **மொத்த கூட்டுத் தொகை** | **268.30** |

**க. மணிவாசன்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/05/2022

பிரிவு அலுவலர்

27/5/2022